بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 07/05/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

ரமலானில் எந்த நன்மைகளை செய்வதற்கு வாய்ப்பு கிடைத்ததோ, தரூது மற்றும் இஸ்திஃக்ஃபார் எந்த அளவுக்கு ஓதினோமோ
அவற்றை ரமலானுக்குப் பிறகும் நாம் தொடரச் செய்ய முயற்சி செய்ய வேண்டும்.
*அத்துடன் சில குறிப்பான துஆக்களின் பக்கம் கவனமூட்டப்பட்டது.*

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது பற்றி கூறப்பட்டது. **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இதைக் குறித்து இவ்வாறு கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் மீது தொடர்ந்து பகைமை பாராட்டி வந்தார்கள். ஒருமுறை அன்னாரது மனதில், ஏன் இந்த மார்க்கத்தின் தோற்றுனரின் கதையையே முடித்து விடக்கூடாது? என்ற எண்ணம் தோன்றியது. இந்த எண்ணம் தோன்றியதும் அன்னார் தன்னுடைய கரங்களில் வாளை ஏந்தியவாறு வீட்டை விட்டு வெளியேறினார்கள். வழியில் ஒரு நபர் மூலமாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சகோதரியும், சகோதரியின் கணவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாக அறிய நேர்ந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தன்னுடைய சகோதரியின் வீட்டுக்குச் சென்றார்கள். அங்கு ஒரு சஹாபி திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருக்கும் குரல் கேட்டது. கதவைத் திறக்க தாமதமானதன் காரணமாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கோபம் இன்னும் அதிகரித்தது. அவர்கள் உடனடியாக தனது சகோதரியின் கணவரிடம் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாக வினவினார்கள். சகோதரியின் கணவர் அதை மறைக்க முயன்ற போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரை அடிக்க முன்னேறினார்கள். அன்னாரது சகோதரி இடையில் வந்து விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அடி சகோதரியின் மூக்கில் விழுந்து விட்டது. இரத்தம் வழிய ஆரம்பித்தது.

ஹஸ்ரத் உமர் (ரலி) உணர்ச்சிவசப்படக் கூடிய மனிதராக இருந்தார்கள். இதைக் கண்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்குள் மென்மையின் உணர்வு தோன்றியது. திருக்குர்ஆனின் பக்கங்களை தமக்கு காட்டுமாறு வேண்டினார்கள். அன்னாருடைய சகோதரியின் வேண்டுதளுக்கிணங்க ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் குளித்துவிட்டு வந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) குளித்த பிறகு திருக்குர்ஆனின் வசனங்களை ஓதினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் ஏற்கனவே ஒரு மாறுதல் ஏற்பட்டிருந்தது. எனவே அன்னார் திருக்குர்ஆனை ஓதியதும் கலிமா ஷஹாதத் கூறினார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உறையிலிருந்து உருவிய வாளை ஏந்தியவாறே ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைச் சந்திக்க தாரே அர்க்கம் சென்றடைந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உருவிய வாளுடன் கதவுக்கு வெளியில் நிற்பதைக் கண்ட சஹாபிகளுக்கு குழப்பம் ஏற்பட்டது. கதவை திறங்கள்; அவர் என்ன செய்கிறார் என்று நான் பார்க்கிறேன் என ஹஸ்ரத் ஹம்ஸா கூறினார்கள். எனவே கதவு திறக்கப்பட்டதும் ஹஸ்ரத் உமர் (ரலி)

அவர்கள் முன்னே வந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வருகையின் நோக்கம் குறித்து வினவியபோது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், யா ரஸூலல்லாஹ்! நான் தங்களுடைய அடிமையாக ஆக வந்திருக்கிறேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு மணி நேரம் முன்பு வரை இஸ்லாத்தின் கடும் எதிரியாக இருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை கொல்வதற்காக வீட்டிலிருந்து வெளியே வந்தார்கள். ஒரு நொடியில் உயர்ந்த தரத்தையுடைய முஃமினாக ஆகிவிட்டார்கள்.

ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தில் இரு நபர்கள் மட்டுமே வீரம் மிக்கவர்களாக கருதப்பட்டு வந்தார்கள். ஒருவர் ஹஸ்ரத் உமர் (ரலி), இரண்டாமவர் அமீர் ஹம்ஸா (ரலி) ஆவார்கள். இவர்கள் இருவரும் முஸ்லிமான போது இவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஹஸ்ரத் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வெளிப்படையாக கஅபா ஆலயத்தில் தொழுதார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட செய்தி பரவியபோது நிராகரிப்பாளர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய வீட்டை முற்றுகையிட்டார்கள். அச்சமயம் மக்காவின் பெருந்தலைவர் ஆஸ் பின் வாயில் அங்கு வந்து நான் உமருக்கு அடைக்கலம் அளிக்கிறேன் என்று அறிவித்தார். அதற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) சில நாட்கள் வரை பாதுகாப்பாக இருந்தார்கள். ஆனால் இந்த நிலைமையை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய மார்க்க தன்மானம் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே ஹஸ்ரத் உமர் (ரலி), ஆஸ் பின் வாயிலின் அடைக்கலத்திலிருந்து வெளியேறிவிட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அதற்குப் பிறகு நான் மக்கத்து வீதிகளில் அடிபட்டுக் கொண்டே இருந்தேன்.

ஹஸ்ரத் ஸைய்னுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் எழுதுகிறார்கள்: ஆஸ் பின் வாயில், பனூ ஸஹ்ம் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பனூ அதீ கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். இவ்விரு கோத்திரமும் நட்புக் கோத்திரமாக இருந்தன. உடன்படிக்கை மற்றும் நட்பின் காரணமாக உமருக்கு உதவ வேண்டியதை தன்னுடைய நற்பண்பின் கடமையாக ஆஸ் பின் வாயில் கருதினார்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** பாருங்கள்! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு எத்தனை கடும் எதிரிகள் இருந்தார்கள்! ஆனால் பிறகு அவர்களிடத்தில் எவ்வாறான மாற்றம் தோன்றியது! ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்திற்கெதிராக ஆயுதம் ஏந்தியவராக இருந்தார்கள். அவர்களுக்கு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் பாக்கியம் கிடைத்தவுடன் இரவு பகலாக மார்க்கத்தின் நலனுக்காக தமது உயிரையும் ஆபத்தில் ஆழ்த்திக் கொண்டார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சம்பவத்தை எடுத்துரைத்தார்கள். அதில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை கொலை செய்தால் அதற்கான வெகுமதி வழங்கப்படும் என்று அபூஜஹ்ல் சார்பாக அறிவிப்பு செய்யப்பட்டது குறித்தும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இரவு வேளையில் கஅபா ஆலையத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் துஆ செய்வதை கேட்ட சம்பவத்தையும் பற்றி விவரித்த பிறகு கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களே கூறுகிறார்கள். ஹஸ்ரத் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஜ்தாவில் எந்த அளவுக்கு அழுதழுது துஆ செய்தார்கள் என்றால், என் மீது நடுக்கம் ஏற்பட்டுவிட்டது. அந்த துஆக்களை கேட்டு எனது உள்ளம் தூள் தூளாகி போய்க்கொண்டிருந்தது. இறுதியில் உண்மையின் அச்சத்தால் என் கையிலிருந்த வாள் கீழே விழுந்தது. நான் ஹஸ்ரத் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய இந்த நிலைமையைக் கண்டு இவர் உண்மையாளர் என்றும் நிச்சயம் இவர் வெற்றி பெற்றுவிடுவார் என்றும் புரிந்து கொண்டேன்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றுமோர் இடத்தில் கூறுகிறார்கள்:** இறுதியில் ஹஸ்ரத் உமர் (ரலி) இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள். பிறகு

அபூஜஹ்ல் மற்றும் இதர எதிரிகளுடன் இருந்த நட்பு மற்றும் தொடர்பு ஒரேயடியாக முறிந்து போனது. அவர்களுக்கு பதிலாக ஒரு புதிய சகோதரத்துவ பந்தம் நிலைபெற்றது. ஹஸ்ரத் அபூபக்ர் மற்றும் இதர நபித்தோழர்கள் கிடைத்தார்கள். முந்தைய தொடர்புகள் பற்றிய எண்ணம் ஒருபோதும் தோன்றவில்லை.

*ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மூன்று வெவ்வேறு ஆதாரங்களை எடுத்து வைத்த பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* இந்த மூன்று இடங்களிலும் இரவில் கஅபா ஆலயத்தில் தாக்குதல் தொடுப்பது பற்றிய குறிப்பு காணப்படுகிறது. அநேகமாக அதற்குப் பிறகு ஆன்மாவின் கட்டாயத்திற்குள்ளாகி பகலிலும் (கொலை செய்ய) சென்றிருக்கலாம். பிறகு சகோதரி மற்றும் சகோதரியின் கணவர் ஆகியோரின் சம்பவம் நிகழ்ந்திருக்கலாம்.

ஹஸ்ரத் இப்னு உமர் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'அல்லாஹ்வே! இவருடைய உள்ளத்தில் உள்ள காழ்ப்புணர்ச்சியை அகற்றி, அதனை நம்பிக்கையாக மாற்றுவாயாக!' என்று துஆ செய்தவாறு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நெஞ்சில் மூன்று முறை கையால் தட்டினார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம், யா ரஸூலல்லாஹ்! தாங்கள் எனக்கு என்னுடைய உயிரைத்தவிர மற்றனைத்து பொருட்களையும்விட அதிக நேசத்திற்குரியவர் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: 'நான் உமக்கு உம்முடைய உயிருக்கும் மேலாக நேசத்திற்குரியவன் ஆகாதவரை உம்முடைய ஈமான் முழுமை அடைய முடியாது.' ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னாரிடம், அல்லாஹ்வின் மீது ஆணையாக! தாங்கள் எனக்கு என்னுடைய உயிரினும் மேலாக அதிக நேசத்திற்குரியவர் ஆவீர்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபீ கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ஆம்! இப்போது சரி என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்தது பற்றி ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் ஒரு அறிவிப்பு காணக் கிடைக்கிறது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹிஜ்ரத் செய்ய நாடிய போது அன்னார் வாள், அம்பு, வில் ஆகியவற்றை கையில் பிடித்தவாறு கஅபாவை நோக்கிச் சென்றார்கள். 'தன்னுடைய தாய் தன்னை இழந்து விடவேண்டும் என்று எவன் விரும்புகிறானோ அவனும், அவ்வாறே தன்னுடைய பிள்ளைகள் அனாதையாகவும், தன்னுடைய மனைவி விதவையாகவும் ஆக வேண்டும் எனவும் எவன் விரும்புகிறானோ அவனும் இந்த பள்ளத்தாக்கை தாண்டி என்னை சந்திக்கட்டும்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தன்னுடைய ஹிஜ்ரத்தைப் பற்றி இந்த அளவுக்கு வெளிப்படையாக அறிவித்ததாக இந்த ஒரு அறிவிப்பு மட்டுமே எடுத்துரைக்கப்படுகின்றது. ஆனால் பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்கள் இதிலிருந்து கருத்து வேறுபாடு கொண்டுள்ளார்கள். உதாரணமாக முஹம்மது ஹுசைன் ஹேக்கல் என்பவர், ஹஸ்ரத் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அமைதியாகவும், மறைந்தவாரும் மதீனாவிலிருந்து வெளியேறுங்கள் என்று கட்டளையிட்டிருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இதற்கு கட்டுப்படாமல் எப்படி இருக்க முடியும்? என்று விவாதித்துள்ளார்கள்.

முஹாஜிர்களில் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் இப்னு உம்மே மக்தூம் அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் 20 நபர்களுடன் மதீனா சென்றடைந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் குபா என்னும் இடத்தில் ரிஃபா பின் அப்தில் முன்திர் அவர்களுடைய விருந்தாளியாக தங்கியிருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவில், ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகியோருக்கு இடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். மதீனாவில் ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உவைம் பின் ஸாயிதா

ஆகியோருக்கு இடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹமது ஸாஹிப் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சகோதரத்துவ பந்தம் ஹஸ்ரத் உத்பான் பின் மாலிக் (ரலி) அவர்களுடன் ஏற்படுத்தப்பட்டிருந்தது என்று எழுதியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் பாங்கு கொடுக்கும் வழக்கம் எவ்வாறு ஆரம்பமானது என்று எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்:** ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸய்த் (ரலி) அவர்களுக்கு கனவின் வாயிலாக பாங்கினை அல்லாஹ் கற்றுக் கொடுத்தான். மேலும் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், அவருடைய கனவினை அடிப்படையாக கொண்டு முஸ்லிம்களிடையே பாங்கின் வழக்கத்தை ஏற்படுத்தினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: எனக்கும் இறைவன் இதே பாங்கினை கற்றுக்கொடுத்தான். ஆயினும் வேறு ஒரு மனிதர் இவ்விஷயத்தை கூறிவிட்டார் என்கின்ற சிந்தனையில் 20 நாட்கள் வரை நான் அமைதியாக இருந்தேன்.

*ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நற்குறிப்பு இனி வரும் காலத்தில் தொடரும் என்று கூறியவாறு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* இன்று ரமலானின் இறுதி ஜுமுஆ ஆகும். ரமலானில் எந்த நன்மைகளை செய்வதற்கு வாய்ப்பு கிடைத்ததோ அவற்றை ரமலானுக்குப் பிறகும் நாம் தொடரச் செய்ய முயற்சி செய்ய வேண்டும். கடந்த ஜுமுஆவில் நான் தரூது மற்றும் இஸ்திஃக்ஃபாரின் பக்கம் கவனமூட்டியிருந்தேன். அவை ரமலானுக்கானதாக மட்டும் இருக்கக்கூடாது. இன்றைய காலகட்டத்தில் தஜ்ஜாலிய நடவடிக்கைகள் புதிய புதிய சூழ்ச்சிகளை பயன்படுத்துகின்றன. நாம் இந்த ஷைத்தானிய தாக்குதல்களிலிருந்து, தஜ்ஜாலிய தாக்குதல்களிலிருந்து நமது பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்காக அவர்களுக்கு இறை இருப்பு மற்றும் இஸ்லாத்தின் அழகிய போதனைகளைக் குறித்து கவனமூட்ட வேண்டிய அவசியம் உள்ளது. ஆனால் இறைவனுடனான நமது தொடர்பு வலுவானதாக இருந்தால்தான் இது சாத்தியமாகும். நம்முடைய தொழுகைகள், நம்முடைய வணக்கங்கள் தரம் வாய்ந்ததாக இருக்கும் போது இது சாத்தியமாகும். சான்றோர்கள் அல்லது ஆரம்பகால அஹ்மதிகளின் சந்ததிகளாக இருந்தாலும் சரி! அல்லது தாமாக பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தவர்களாக இருந்தாலும் சரி! நாம் உலகை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களாக, நமது நிலைமையை ஆராய்ந்தவர்களாக இருக்கும் போதுதான் நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள முடியும்; நம்முடைய சந்ததிகளையும் பாதுகாக்க முடியும். இதை அனைவரும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

இன்றைய நாட்களில் கொரோனா தொற்று நோய் உலகில் பரவியிருக்கின்றது. அதில் இருந்து பாதுகாப்பு பெறவும், அல்லாஹுத்தஆலாவின் கருணையை பெறுவதற்காகவும் குறிப்பாக நாம் துஆ செய்ய வேண்டும். அதேபோன்று குறிப்பாக எந்த நாடுகளில் அஹ்மதியத்திற்கு எதிர்ப்புகள் வலுத்துக் கொண்டே செல்கின்றனவோ அவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். பாகிஸ்தானிய அஹ்மதிகள் குறிப்பாக சதக்காக்கள் மற்றும் துஆக்களில் எப்பொழுதும் அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.

رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِي وَانْصُرْنِي وَارْحَمْنِي

ரப்பி குல்லு ஷைஇன் காதிமுக ரப்பி ஃபஹ்ஃபஸ்னீ வன்ஸுர்னீ வர்ஹம்னீ.

اَللّٰهُمَّ إِنَّا نَجْعَلُكَ فِي نُحُوْرِهِمْ وَنَعُوْذُبِكَ مِنْ شُرُوْرِهِمْ

அல்லாஹும்ம இன்னா நஜ்அலுக்க ஃபீ நுஹூரிஹிம் வ நஊதுபிக்க மின் ஷுரூரிஹிம்.

இந்த துஆக்களை அதிகம் ஓதுங்கள். எந்த அளவுக்கு ரமலானில் தொழுகைக்காக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதோ அது ரமலானுக்குப் பிறகும் தொடர வேண்டும்.

அதேபோன்று எல்லாவிதக் குழப்பங்களில் இருந்தும் விலகி இருப்பதற்காகவும், முஸ்லிம் சமுதாயத்திற்காகவும், ஒட்டு மொத்த மனித குலத்திற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹுத்தஆலா அனைவருக்கும் அதற்கான வாய்ப்பினை வழங்குவானாக!

(தமிழாக்கம்: மவ்லவி முஹம்மது சுல்தான் மைதீன்)